**செய்தி வெளியீடு எண்.464** **நாள். 11.8.2009**

"ஸ்வைன் ப்ளூ" நோய் பரவாமல் தடுப்பது தொடர்பாகவும், அதுகுறித்து எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றியும் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெறுமென்று நேற்றையதினம் செய்தியாளர்கள் கூட்டத்தில் முதலமைச்சர் கலைஞர் அறிவித்ததற்கிணங்க – இன்று (11–8–2009) தலைமைச் செயலகத்தில் – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் ஆய்வு நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு துணை முதல்வர் மு.க. ஸ்டாலின், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், செய்தித் துறை அமைச்சர் மாண்புமிகு பரிதி இளம்வழுதி, மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் திரு. வி.கே. சுப்புராஜ், ஐ.ஏ.எஸ்., பள்ளிக் கல்வித் துறை செயலாளர் திரு. எம். குற்றாலிங்கம், ஐ.ஏ.எஸ்., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ராஜேஷ் லகானி, ஐ.ஏ.எஸ்., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் எஸ். விநாயகம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை இயக்குநர் டாக்டர் பெ. நந்தகோபால்சாமி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத் துறை இயக்குநர் டாக்டர் இளங்கோ, விமான நிலைய அதிகாரி, இரயில்வே துறை அதிகாரி மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்நோய் பரவாமல் இருக்க இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கேட்டறிந்து, மேலும் பரவாமல் இருக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அமைச்சர்களுடனும், அதிகாரிகளுடனும் விரிவாக விவாதித்தார். அப்போது தமிழ்நாட்டில் $AH_1N_1$ என்னும் வைரஸ் நோயினால் மாஸ்டர் சஞ்சய் என்னும் நான்கு வயது சிறுவன் 10.08.2009 அன்று இறந்து விட்டார் என்பதைப் பற்றியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிவுடன் கேட்டறிந்தார். அப்போது சென்னை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் விமான நிலையங்களில் வெளிநாடுகளிலிருந்து வந்த 4888 விமானங்களில் 7,71,622 பயணிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளனர் என்றும், சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களில் சரக்கு கப்பலில் வந்த 6981 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பரிசோதனை செய்யப்பட்டதையும், தமிழகத்தில் இதுவரை 376 நபர்களுக்கு தொண்டை சளி மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்யப்பட்டதில், 54 நபர்களுக்கு இந்த நோய் உள்ளது உறுதி செய்யப்பட்டு அதில் 40 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு அவர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் எஞ்சிய 14 நபர்கள் தற்போது அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. அவர்களுக்கு நல்ல முறையில் விரைவில் சிகிச்சை அளிக்க முதலமைச்சர் ஆணையிட்டார். இந்நோயின் அறிகுறிகளில் காய்ச்சல், தொண்டை வலி, உடல் வலி, வாந்தி மற்றும் வயிற்றுபோக்கு எவருக்கேனும் காணப்பட்டால் அவர்கள் உடனடியாக அருகிலுள்ள அரசு மருத்துவமனைகளுக்கு அழைத்து வரப்பட்டு தொண்டை சளி மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்ய வேண்டும் என்றும், எல்லா அரசு

மருத்துவமனைகளும் சுணக்கம் காட்டாமல் இந்த பணியை செய்ய வேண்டும் என்றும் முதலமைச்சர் அறிவுறுத்தினார். பரிசோதனையில் இந்த நோய் இருப்பது உறுதி செய்யப்பட்டால் அவர்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சை போதுமான அளவில் உள்ளதா என்றும், மருந்து மாத்திரைகள், தற்காக்கும் சாதனங்கள் மற்றும் பரிசோதனை செய்வதற்கு தேவையான உபகரணங்கள் போதுமான அளவில் உள்ளதா என்பதையும் கேட்டறிந்து இவைகள் தங்கு தடையின்றி கிடைக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

பள்ளிகளில் மாணவர்களை விழிப்புடன் கண்காணிக்க வேண்டும் என்றும், பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு எவருக்கேனும் இந்த நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டால், கால தாமதமின்றி உடனடியாக பொது சுகாதாரத் துறை அலுவலர்களுக்கு தெரிவித்து மாணவர்களுக்கு பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் எல்லா பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்தப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார். இந்த நோய் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும், மேலும் உயிரிழப்பு நிகழா வண்ணம் எல்லா முன்னேச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு உத்திரவிட்டார். இந்த நோயை தமிழகத்தில் பரவாமல் தடுத்திட அரசு எடுக்கும் எல்லா நடவடிக்கைகளுக்கும் பொதுமக்கள், தனியார் மருத்துவமனைகள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் ஒத்துழைப்பு தருமாறும் அப்போது கேட்டுக் கொண்டார்.

சென்னை மற்றும் வேலூரிலே மட்டும் பரிசோதனை செய்வதற்குப் பதிலாக மாவட்ட மக்களுக்கு உதவிடும் வகையில் மதுரை, கோவை, திருநெல்வேலி ஆகிய நகரங்களிலும் பரிசோதனை மையங்களை ஏற்படுத்திட வேண்டுமென்றும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

தமிழகத்தில் இந்த நோயைப் பற்றி எந்த பயமும் பொதுமக்கள் கொள்ளத் தேவையில்லை என்றும் எல்லா நடவடிக்கைகளையும் அரசு முனைப்புடன் செய்து வருகிறது என்றும், எனவே யாரும் பீதி அடையத் தேவையில்லை என்றும், இத்தகைய செய்திகளை தொலைக்காட்சிகள் வெளியிடும்போது மிகைப்படுத்திக் கூற வேண்டாமென்றும் தமிழக முதலமைச்சர் கலைஞர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.